பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 04 2025 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்-

1. அரசு முறைப்பயணமாக, **Slovakia** சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு **Peter Pellegrini**–வுடன் பேச்சு நடத்தினார்.
2. கடற்படைக்காக 26 ரஃபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
3. விவசாயிகள் தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.
4. டோமினிக் குடியரசில் இரவு நேர கேளிக்கை விடுதியில் மேற்கூரை சரிந்து விழுந்ததில் நேரிட்ட விபத்தில் 113 பேர் உயிரிழந்தனர்.
5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Rudrankksh** – ஆரியா இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

அரசு முறைப்பயணமாக, **Slovakia** சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு **Peter Pellegrini**–வுடன் பேச்சு நடத்தினார்.

**Bratislava** –ல் நடைபெற்ற இந்த பேச்சுக்களின்போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர், இரண்டு ஒப்பந்தங்களும் கையெழுத்தானதாக அவர் மேலும் கூறுகிறார்.

**<<<<<>>>>>>**

கடற்படைக்காக 26 ரஃபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கடற்படைக்கு சொந்தமான கப்பலில் இருந்து இயக்குவதற்காக இந்த விமானங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கான ஒப்பந்தம் பிரான்ஸ் நாட்டுடன் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**<<<<<>>>>>>**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக இன்று கோவை வந்துசேர்ந்தார்.

சூலூர் விமானப்படை தளத்தில் மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், மாவட்ட ஆட்சியர் திரு பவன்குமார் மற்றும் உயரதிகாரிகள் அவரை வரவேற்றனர்.

**<<<<<>>>>>>**

விவசாயிகள் தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் விவசாயிகள் திருவிழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

வேளாண் பணிகளில் தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதை தடுக்க இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>>

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக நேபாளம் சென்றுள்ள அவர், பிம்ஸ்டெக் வேளாண் அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்று பேசினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்படும் தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்த ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் மற்றும் மண்வள பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாடு முழுவதும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகள் இணையதளம் வாயிலாக இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த கிராமங்களின் விவரங்கள் அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் கிராம பஞ்சாயத்துகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான தரவரிசையில் குஜராத் முதலிடத்திலும், தெலங்கானா இரண்டாவது இடத்திலும் உள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்துமாறு அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று மும்பையில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் சுகாதாரத்துறை திட்டங்களின் செயலாக்கம் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

புற்றுநோய் சிகிச்சைக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

புதிய மருத்துவக்கல்லூரிகள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்துமாறு திரு தேவேந்திர பட்நவிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசத்தில் அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 2 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இது கடந்த ஜனவரி மாதம் முதல், முன்தேதியிட்டு வழங்கப்படும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு **Tom Vadakkan,** கேரளாவில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாக இடதுசாரி தலைவர்களில் ஒருவரான திரு சுதாகரன் குற்றம் சாட்டியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதுபோன்று பல்வேறு பிரச்சினைகளை திரு சுதாகரன் எழுப்பியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊழல் முதலமைச்சர் அலுவலகம் வரை சென்றுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

இதன்காரணமாக, முதலமைச்சராக திரு பினராயி விஜயன் தொடர்வது ஏற்புடையது அல்ல என்றும் திரு **Tom Vadakkan** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பஞ்சாபில் நான்காயிரம் கோடி ரூபாய் செலவில் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு இயக்கத்திற்கு அம்மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சண்டிகரில் இதுதொடர்பாக, அம்மாநில முதலமைச்சர் திரு பகவந்த் சிங் மான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த இயக்கத்தின்கீழ், 20 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிலான சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்று வருகிறது.

உதம்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட **Jopher** கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக, இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியளார் தெரிவிக்கிறார்.

இரண்டு முதல் மூன்று தீவிரவாதிகள் அப்பகுதியில் பதுங்கியிருப்பதாக அவர் மேலும் கூறுகிறார்.

கூடுதலாக பாதுகாப்புப்படையினர் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

டோமினிக் குடியரசில் இரவு நேர கேளிக்கை விடுதியில் மேற்கூரை சரிந்து விழுந்ததில் நேரிட்ட விபத்தில் 113 பேர் உயிரிழந்தனர். 150 பேர் காயமடைந்தனர்.

**Santo Domingo**–வில் உள்ள விடுதியில் பிரபல பாடகர்கள் பங்கேற்ற இசை நிகழ்ச்சியின்போது இந்த விபத்து நேரிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இடிபாடுகளுக்கு இடையே மேலும் சிலர் சிக்கியிருக்கக்கூடும் என்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

<<<<<>>>>>>

ரஷ்ய ராணுவத்தில் சீனர்கள் பணியாற்றுவதாக உக்ரைன் தெரிவித்துள்ள கருத்துக்கள் தவறானது என்று சீனா கூறியுள்ளது.

பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு **Lin Jian,** உக்ரைன் நாட்டின் கருத்து அடிப்படை ஆதாரமற்றது என்று கூறினார்.

<<<<<>>>>>>

சீனாவில் நேரிட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

**Chengde** நகரில் உள்ள பராமரிப்பு மையம் ஒன்றில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து அந்நாட்டு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**<<<<<>>>>>>**

குஜராத் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா மற்றும் தில்லியில், அனல்காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தானிலும் கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Rudrankksh** – ஆரியா இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

அர்ஜென்டினாவின் **Buneos Aires**–ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில், இந்த இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நர்மதா – அர்ஜுன் இணை வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் பங்கேற்கவுள்ளது.

------------

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-8 என்ற செட் கணக்கில், கஜகஸ்தானின் **Dmitriy Panarin** –ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ரூபன்குமார் ரத்ன சபாபதி – ஹரிஹரன் **Amsakarunun** இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-3, 21-12 என்ற செட் கணக்கில் இலங்கையின் **Madhuka Dulanjana – Lahiru Weerasinghe** இணையை வென்றது.

----------------

உலகக்கோப்பை **Wushu** போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் முகேஷ் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் **Chhava** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

------------------

பாரிஸில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் **Arjun Erigaisi** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<>>>>>>**